[1974 மார்ச் 6

இணைப்பு I

235-ம் பக்கத்தில் 294 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினுவிற்குரிய விடையைக் காண்க)

விவர அறிக்கை.

சென்னை மாநகரில், 1973 ஆம் ஆண்டு, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் "குறுகிய கால காய்ச்சலில்" வாடுவோர் எண்ணிக்கை சற்றே உயர்ந்திருந்தது. இவ்வகைக் காய்ச்சல் சுவாச உறுப்பின் மேல் பகுதியில் ஏற்படும் தொற்றுக் கிருமியின் தொடர்பால் ஏற்படுவதாகும். இதற்கும், கிழக்காசிய நாடுகளில் ஏற்படுகின்ற கொள்ளை நோய் வகை "இன்புளுயன்சா" காய்ச்சலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்த வகைக் காய்ச்சல் ஆண்டுதோறும் வருகிறது. 1973 ஆம் ஆண்டு ஆகஸடு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இக்காய்ச்சல் அசாதாரண மான அளவிலோ அன்றிப் பெருமளவிலோ அதிகரிக்கவில்லை. காய்ச்சலால் தாக்குண்டவர்களின் எண்ணிக்கையளவு பீதியளிப்ப தாகவே இல்லை. சென்னை மாநகரில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவமனைகள் மருந்தகங்களில், வெளி நோயாளிகளாக நாளொன்றுக்குப் புதிதாக மருத்துவச் சிகிச்சை பெற்ற மொத்தம் 300 பேரில் சராசரியாகச் சுமார் 10 பேர் இவ்வகைக் காய்ச்சலுக்காகச் சிகிச்சை பெற்றனர். உயர்ந்த அளவு ஒரு நாளில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 20-க்கு மேல் போகவில்லை. சென்னை மாநகராட்சியின் மருந்தகங்களில் 1973 ஆம் ஆண்டு, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் திங்களில் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

ஆகஸ்டு	..	22,510
செப்டம்பர்	..	24,179
அக்டோபர்	..	24,924

முந்திய ஆண்டில், அதாவது 1972-இல், இதே காலப்பகுதியில் சென்னை மாநகராட்சி மருந்தகங்களில் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

1972 ஆகஸ்டு	..	26,386
1972 செப்டம்பர்	..	20,405
1972 அக்டோபர்	..	29,733

1974 மார்ச் 6]

2. மருந்தக அளவில் நோயாளிகளுக்குச் சிகிச்சை திறமையாகச் செய்யப்பட்டது. இவ்வகைக் காய்ச்சலால் அவதியுறுவோரின் எண்ணிக்கை உறுதியாகக் குறைந்துவிட்டது.

3. சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகள், மருந்தகங்களில், சிகிச்சை பெற வந்தோர் கணக்குப்படி "டிங்கு" காய்ச்சலும், "டிங்கு" வகைக் காய்ச்சலும் மிகச் சொற்ப அளவில், அதாவது, ஏறத்தாழ வாரத்துக்கு ஒருவருக்குக் கண்டது. அது கொள்ளைநோயாகப் பரவவில்லை.

4. கொசுக்கள் உற்பத்தியாவதைக் கட்டுப்படுத்தல், பொது மக்களுக்கு உடல்நலக் கல்வியறிவைப் புகட்டுதல் போன்ற முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டது.

5. "டிங்கு" காய்ச்சல் கொள்ளை நோய்போல் பரவும் சாத்தியக் கூறுகள் இருக்குமாயின், அதுபற்றி விழிப்புடன் கவனித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு தன் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளின் தலைவர்களுக்கு மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் உத்தரவிட்டார்.

இணைப்பு II

247-ம் பக்கத்தில் 299 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

ஈரோடு வட்டம் சென்னிமலை பிர்காவிலுள்ள முத்துகவுண்டன் வலசு, புங்கம்பாடி, பரவலசு, ஊமைலாடி, கவுண்டன்பாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள அரிசன மக்களுக்கு குடிநீர்வசதி அளிக்க அரசால் எடுக்கப்பட்ட விவரங்களை காட்டும் விவர அறிக்கை.

(1) முத்துகவுண்டன் வலசு கிராம அரிசனங்களுக்கு குடிநீர் வசதி அளித்தல்.

முத்துகவுண்டன் வலசு கிராம அரிசன மக்களுக்கு ஏற்கனவே ஒரு குடிநீர் கிணறு உள்ளது.